நகல்:

## தமிழக அரசு

## சுருக்கம்.

கட்டிடங்கள் – அரசு அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக வாடகைக்கு அமர்த்தப்படும் தனியார் கட்டிடங்கள் – இறுதி வாடகை நிர்ணயம் செய்யப்படு முன் பொதுப்பணித் துறை அதிகாரிகள் தற்காலிக வாடகை நிர்ணயம் செய்து அனுமதி வழங்கல் – தற்காலிக ஏற்பாட்டினை நிரந்தரமாக்குதல் – ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறது.

---

பொதுப்பணித் துறை

அரசு ஆணை (நிலை) எண். 1958 நாள். 20.9.'84.

படிக்கவும்.

1. அரசாணை (நிலை) எண். 551, (பொதுப்பணித் துறை நாள். 6.4.77.
2. அரசாணை (நிலை) எண். 721, பொ.ப.து. நாள். 13.6.'78.
3. அரசாணை (நிலை) எண். 446, பொ.ப.து. நாள். 30.3.81.
4. பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) கடிதம் எண். கிடு ஓ (பி) 72088/84,1 நாள். 2 3.84.

..........

ஆணை:

அரசு அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக வாடகைக்கு அமர்த்தப்படும் தனியார் கட்டிடங்களுக்கான வாடகை, 1960-ம் வருடத்திய தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தில் சொல்லப் பட்டவாறு, அக் கட்டிடம் உள்ள நிலத்தின் சந்தை நிலவர மதிப்பு, கட்டிடத்தின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

2. பொதுப் பணித்துறை அதிகாரிகள் நிலத்தின் மதிப்பை வருவாய்த்துறை அதிகாரிகளிடமிருந்து பெற்று, கட்டிடத்தின் மதிப்பையும், நிர்ணயம் செய்த பின், வாடகையை இறுதியாக நிர்ணயித்தபின் துறை அதிகாரிகள் அதற்கு அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. இதனால் கட்டிடச் சொந்தக்காரர்களுக்கு வாடகை உரிய காலத்தில் கொடுக்க முடியாத சூழ்நிலையில், கட்டிடத்தை காலிசெய்ய வேண்டிய நிர்பந்தமும் ஏற்பட்டது.

3. எனவே, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்களின் பரிந்துரையின் பேரில், கட்டிடங்களுக்காக வாடகை, 1960-ம் வருடத்திய தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைச் கட்டுப்பாடு) சட்டத்தில் சொல்லப்பட்டவாறு பொதுப்பணித் துறை அதிகாரிகளால் நிர்ணயம் செய்யப்பட்டு, உரிய துறை அதிகாரிகளால் அனுமதிக்கப்படுவதற்கு முன், கட்டிடங்களின் மதிப்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கட்டிடங்களுக்கு தற்காலிக வாடகையை பொதுப்பணித்துறை அதிகாரிகள் நிர்ணயம் செய்து, அவர்களே அதற்கு அனுமதிக்கலாம் என்றும், அந்த நடைமுறையை ஓராண்டிற்கு அடிப்படையில் செயல்படுத்தலாம் என்றும் அரசாணை (நிலை) எண். 551, பொதுப்பணித்துறை, நாள். 6.4.77-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

த.தி.பா.

4. அரசாணை (நிலை) எண். 721, பொதுப்பணித்துறை, நாள். 18.6.78 மற்றும் அரசாணை (நிலை) எண். 446, பொதுப்பணித்துறை நாள், 30.3. 1-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கிணங்க இந்த நடைமுறை 31.3.84 வரை நீட்டிக்கப்பட்டது.

5. அரசாணை (நிலை) எண். 551, பொதுப்பணித்துறை, நாள். 6.4.77-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணை கட்டிடச் சொந்தக்காரர்களுக்கு வாடகை பட்டுவாடா செய்வதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தை தவிர்ப்பதில் பெருமளவு துணை புரிவதாகவும், இவ்வாணையை செயல்படுத்துவதில் இடையூறு மற்றும் தடைகள் ஏதுமில்லை என்றும் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்கள் இப்போது தெரிவித்து, இந்த நடைமுறையை நிரந்தரமாகப் பின்பற்றலாம் என்று பரிந்துரை செய்து, தக்க ஆணைகள் பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுள்ளார்.

6. அரசு ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்களின் பரிந்துரையை ஏற்று மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையை நிரந்தரமாக பின்பற்றலாம் என்று ஆணை பிறப்பிக்கிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் பிறப்பிக்கப்படுகிறது. அத்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.55877/பொது/84-1 நாள்.,16.5.84.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மாதவ சர்மா,
ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

மேல் குறிப்பு எண். தொ.கோ.13/91604/ ஆ1/ 84 நாள். 8.10.'84.

ஆராய்வாளர் அலுவலகம்,
சென்னை-2.

வகை 3-ன்படி எல்லா அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(ஒம்) மா.பா. வெங்கடாசலம்,
உதவி ஆராய்வாளர்.(ஊ.ஒ.ஓ.)

/உண்மை நகல்/

கண்காணிப்பாளர்.

சா.6/11